திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்


முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org


### ஆசிரியர் குழு (இந்தியா)


முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com


### செய்தி ஆசிரியர்


முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


### ஆசிரியர் குழு (அயலகம்)


திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg


### தொடர்புக்கு


0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


### முகவரி




இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கவிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும்



**பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**
தென்னாசிய நுண்கலை கற்கை மையம்,
அண்ணாமலை, கனடா.
**மின்னஞ்சல்** : balasundarame@yahoo.com

## முன்னுரை

மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பெருமரபுத் தெய்வங்கள், நாட்டுப்புறத் தெய்வங்கள் (Folk Dieties) என வகைப்படுத்திக் கொள்ளலாம். நாட்டுப்புறத் தெய்வங்கள், வேத - ஆகம வழிப்பட்ட சைவ, வைணவத் தெய்வங்களிலிருந்து பல்வேறு நிலைகளில் பண்பாலும் வழிபாட்டு முறைகளாலும் வேறுபடுகின்றன. ஆயினும் சைவ - வைணவத் தெய்வங்களோடு நாட்டுப்புறத் தெய்வங்களைத் தொடர்புபடுத்தி, அவற்றுடன் ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றே வந்துள்ளன(1). இதன் தொடர்ச்சியாக இலங்கையில் கண்ணகி கோயில்கள் ஆரியமயமாக்கப்பட்டு மனோன்மணித் தெய்வம் எனப் பெயர் மாற்றமும் பூசை முறைகளும் மாற்றப்பட்டு வருவதைக் குறிப்பிட வேண்டும். தமிழ்க் கடவுள் முருகனது வழிபாட்டு முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வேத நெறிப்படுத்தப்பட்டு முருகன் - ஆறுமுகக் கடவுளாக(சுப்பிரமணியராக) மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அறிந்ததேயாகும். ஆயினும் முருகன் - வள்ளி வழிபாடு, நாட்டுப்புற வழிபாடாகவும் கூத்துகளாகவும் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன.

கண்ணகித் தெய்வம் வேத - புராணங்களுடன் தொடர்புபடுத்தப்படாத ஒரு தெய்வமாகும். நாட்டுப்புறத் தெய்வங்களின் பெயர், வடிவம், வழிபடுவோர், பூசாரி, சாமியாடிகள், செயற்பாடுகள், தெய்வமுறல். இருப்பிடம், கோயில், பலி, நம்பிக்கைகள், புராண மரபுக்கதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறத் தெய்வங்களை வகைப்படுத்திக் கொள்ளலாம்(2). இக்கட்டுரை காரைதீவில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் பற்றிய நாட்டுப்புற இலக்கியங்கள், கண்ணகி

வழிபாட்டுடன் தொடர்புடைய மன்பேராயக் கட்டுமானங்கள், இயங்குநிலை என்பன பற்றி ஆராய்வதாக அமைகிறது.

**ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் அறிமுகம்**

இலங்கையின் கிழக்கிலும் வடக்கிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கண்ணகை கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றில் 60க்கும் மேற்பட்ட கோயில்கள் கிழக்கிலங்கையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் காரைதீவுக் கண்ணகி அம்மன் கோயில் மிகத் தொன்மையானதும் பெரிய கோயிலுமாகும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மனையறம்படுத்த காதை முதலாகக் கண்ணகியை வணிகர் குலத்துதித்த தெய்வத் தன்மை பொருந்திய பெண்ணாகவே வருமாறு படைத்துக் காட்டியுள்ளார்.

**“போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்**
**தீதிலா வடமீனின் திறமிவள் திறம்”**

**(சிலம்பு, காதை-1, வரி-27, 28)**

**“இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி**
**தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து**
**ஒருமா மணியா உலகிற் கோங்கிய - திருமாமணி”**

**(சிலம்பு, காதை - 12, வரி - 47, 50)**

**“கற்பு கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்”**

**(சிலம்பு, காதை - 15, வரி - 143, 144)**

என இளங்கோவடிகளும், கவுந்தியடிகளும் கண்ணகியைப் போற்றியிருத்தல் நோக்கத்தக்கது.

ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றம், பரவல், கோயில்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், வழிபாட்டு சடங்குகள், நம்பிக்கைகள், அவ்வழிபாட்டுடன் இணைந்த மன்பேராயக் கட்டமைப்புகளின் உருவாக்கம், அவற்றோடிணைந்த பொருண்மியச் செயற்பாடுகள் என்பனவை நாட்டுப்புறவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது. சிலப்பதிகாரப் பதிகத்தில், கயவாகு வேந்தன்; கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய செய்தி கூறப்படுகிறது. கயவாகு மன்னனின் ஆட்சிக்காலம் கி.பி.

2ஆம் நூற்றாண்டாகும். சேரன் செங்குட்டுவன் நடத்திய கண்ணகி விழாவில் கலந்துகொண்ட கயவாகு மன்னன் கண்ணகி சிலை ஒன்றுடன் இலங்கைக்குத் திரும்பி, யாழ்ப்பாணம் - சம்புத்துறைக்கு அருகேயுள்ள திருவடிநிலை என்ற இடத்தில் கண்ணகி சிலையுடன் வந்திறங்கி, அங்கிருந்து அனுராதபுரத்திற்குச் சிலையைக் கொண்டுவந்தான். கண்ணகிக்குக் கோயில் அமைப்பதற்கு மலைப்பிரதேசமே உகந்த இடமென்றெண்ணி, கண்டியில் கண்ணகி கோயிலைத் தலதா மாளிகைக்கு முன்புறமாக அமைத்தான். பௌத்தச் சிங்கள மக்களும் கண்ணகித் தெய்வத்தைப் பத்தினி தெய்யோ என்ற பெயரால் வழிபட்டு வருகின்றனர். வருடந்தோறும் கண்டியில் புத்தமதப் பெரஹரா (தெய்வ ஊர்வலம்) நடைபெறும்போது இக்கண்ணகி கோவிலிலிருந்தும் தெய்வச்சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவது வழக்கமாகும்.

ஈழத்துத் தொன்மை வரலாறு, கிழக்கிலங்கை சமூகக் கட்டமைப்பு, பண்பாட்டு கூறுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆராயும்போது, பண்டை நாட்களில் கிழக்கிலங்கையில் குடியேறிய சேரநாட்டு மக்களே தம்முடன் கண்ணகி வழிபாட்டை அங்குக் கொண்டுவந்திருக்கலாம் என்பதே இக்கட்டுரை ஆசிரியரின் கருத்தாகும்.

**கண்ணகி வழிபாட்டின் தோற்றக் காலம்**

தமிழகத்தில் கண்ணகி தெய்வமாகப் போற்றப்பட்ட செய்திகளைப் பதிற்றுப்பத்தும், சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரக் காலத்திற்கு (கி.பி. 5 ஆம் நூ-டு) முன்னராகக் கண்ணகி வழிபாடு சேரநாட்டிலும், கன்னடத்திலும், இலங்கையிலும் இடம்பெற்று வந்திருக்கிறது. சேரன்செங்குட்டுவன் இமயமலையில் கல்லெடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை நிறுவிப், பெருவிழா எடுத்த செய்தி சிலப்பதிகாரம் வரந்தருகாதையில்(வரி:155-164) கூறப்பட்டுள்ளமை கண்ணகி வழிபாட்டின் தொன்மையைக் குறிப்பதாகும். சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி விழாவுக்குப் பாண்டியர், சோழர், குடகர், கொங்கர், மாளுவர், ஈழவர் முதலான வேந்தர்கள் சென்றுள்ளனர் (சிலம்பு: உரைபெறு கட்டுரைக்காதை) என்ற செய்தி கண்ணகி வழிபாட்டின் பரவல் நிலையைக் குறிப்பதாகும்.

கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சி பற்றிய செய்திகள் தமிழகத்தில் பெறமுடியாதிருப்பினும், கண்ணகி வழிபாடு நாட்டுப்புற வழக்கில் பேணப்பட்டு வந்துள்ளமையைத் தமிழகத்து ”கோவலனார் கதை” சான்றுபடுத்துகின்றது. கற்பைப்

போற்றிய சமணச் சமயமும் கண்ணகி வழிபாட்டிற்குத் துணையாக அமைந்திருக்க வேண்டும். இளங்கோ சிலப்பதிகாரக் காப்பிய ஆக்கத்திற்குப் புறநானூற்றின் ஏழு பாடல்கள் (171 - 177) வழிவகுத்ததோடு, இளங்கோவிற்கு முற்பட்ட காலத்துக் கண்ணகி தொடர்பான நாட்டுப்புற இலக்கியங்களும்; நம்பிக்கைகளும் துணையாக அமைந்திருந்தன என்பதைச் சிலம்பிலுள்ள நாட்டுப்புறவியல் கூறுகள் சான்றுபடுத்துகின்றன.(3) அதனைத் தொடர்ந்து, கண்ணகி வழிபாடு தமிழகத்திலும், அதன் வடக்கேயுள்ள நாடுகளிலும் பரவியிருந்தது. பல்லவர் காலத்திலே தமிழகத்தில் வீறுடன் பரவிய பக்தி இயக்கத்தினாலும், ஆரியமயமாக்கத்தினாலும் கண்ணகி கோயில்கள் துர்க்கையம்மன், மனோன்மணியம்மன் எனப் பெயர் மாற்றம் பெற்ற கோயில்களாக நிலைபெறலாயின. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் முதலாம் இராஜராஜன் தஞ்சைப் பெருங்கோயிலுக்குச் சிறிது தூரத்தில் கண்ணகிக்குக் கோயில் அமைத்தமையும் கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியைக் குறிப்பதாகும்.

**சேரநாடும் மட்டக்களப்புத் தமிழகமும்**

மட்டக்களப்புப் பிரதேசத்தின் தொன்மைக்கால வரலாறு, தமிழரின் தொன்மைப் பண்பாடு என்பன பற்றி எஸ். ஓ. கனகரட்ணம், வி. சீ. கந்தையா, கே. தனபாக்கியம் கவிக்கோ வெல்லவூர்க்கோபால், பேராசிரியர் சி.பத்மநாதன்(4) முதலிய பலர் ஆய்வுசெய்து பதிவுசெய்துள்ளனர். 'ஒரு நாட்டில் வாழும் இனத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அகழாய்வுச் சான்றுகள், இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மற்றும் பிறநாட்டார் குறிப்புகள் முதலியன துணையாகின்றன. இத்தகைய சான்றுகளும் உண்மைபேசாது அமைதி காக்கும்போது அல்லது மறைக்கப்பட்ட வரலாற்று செய்திகளை நாட்டுப்புறவியல் தரவுகள், உய்த்து உணர்வதற்குத் துணையாகின்றன. இப்பின்னனியில் ஈழத்தில் கண்ணகி வரலாற்றின் தொடக்கமும் அதன் பரம்பலும் பற்றிய ஆய்வுக்கு நாட்டுப்புறவியல் ஆய்வுத் தரவுகள் பெரிதும்; பங்களிப்பு செய்துள்ளன. "தமிழர் திருமண மரபுகள் மட்டக்களப்பு மாநிலம்" (2002) என்னும் நூலிலே, "மட்டக்களப்புப் பூர்வீகக் குடிகள் சேரநாட்டு தொடர்புடையவர்கள் என்பது நன்கு நிறுவப்பட்டுள்ளது"(5). அத்துடன் பண்டை நாட்களில் சேர நாட்டிலிருந்து கிழக்கிலங்கைக் கரையோரப் பகுதிகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவந்த சேரநாட்டு தமிழரே கண்ணகி வழிபாட்டைத் தம்முடன் கொண்டு வந்திருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளது. இக்கருத்து பற்றி இத்துறை அறிஞர் மேலாய்வு செய்வதற்குப் பெரிதும் வாய்ப்புள்ளது.

இலங்கையின் கரையோர மக்களின் வரலாறு மிகத் தொன்மையானது. கதிர்காமம், திஸ்ஸமகரகமை, மாத்தறை முதலிய இடங்களில் 1960களுக்கு முன்னர் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த புதைபொருள் சான்றுகள், அவற்றைத் தொடர்ந்து கிழக்கிலங்கையில் அகழாய்வில் அகழ்ந்தெடுக்கப்பட்டு அதன் உண்மையை வெளிப்படுத்த விரும்பாதோரால் மறைக்கப்பட்ட சான்றுகள் அனைத்தும் கிழக்கிலங்கைத் தமிழ் மக்களின் மிகப் பழங்காலத்து வரலாற்று தடயங்களாகும். இவற்றைவிட 2020இல் காரைதீவுக் கண்ணகி அம்மன் கோயில் படிக்கட்டு பொறிக்கப்பட்டிருந்த கி.மு.முதலாம் நூற்றாண்டு எழுத்து வாசகங்களும் இப்பகுதி வரலாற்று தொன்மையைக் குறிப்பனவாகும்.(6) எனவே காரைதீவுக் கண்ணகி கோயில் வரலாறும் வழிபாடும் கி.மு. முதலாம் நூற்றாண்டைத் தொடர்ந்து ஏற்பட்டது என்பதன் அடிப்படையிலே இக்கண்ணகி கோயிலின் பழைமையும் புலனாகின்றது.

“கி.பி. 2ஆம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் எடுத்த கண்ணகி விழாவில் இலங்கை வேந்தன் இரண்டாம் கஜபாகு கலந்து கொண்டதோடு, அவன் வஞ்சியிலிருந்து கண்ணகி சிலையுடன், நூற்றுக் கணக்கான சேரநாட்டு குடிகளையும் அழைத்து வந்து, கிழக்கிலங்கையில் குடியமர்த்தியதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு சேரநாட்டு மக்கள் குடியமர்த்தப்பட்ட பகுதி மட்டக்களப்புப் பிரதேசம் என்பதற்குச் சான்றுகளுள்ளன. இதுதொடர்பாகக் கேரளத்துச் சமூகவியல் பேராசிரியர் எஸ். ஆர். பணிக்கர் “Journal of Kerela Studies” என்ற ஆய்விதழில் எழுதிய கட்டுரையில் வருமாறு குறிப்பிடுவர்: “கி.பி. 2ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ச்சியாகக் கேரளத்திலிருந்து ஈழநாட்டுக்கு மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். ஈழத்தின் வடமேற்கு, மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் இவர்கள் பெருமளவில் குடியேறினர். இவர்களில் முக்குவர், பணிக்கர் என்போர் இப்பகுதியின் முதன்மையான மன்பேராயத்தினர் ஆகின்றனர். சேரநாட்டு மரபுவழி வழக்காறுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் இம்மக்கள் தங்களுடன் எடுத்துச் சென்றதோடு மேலும், அவற்றை அவர்கள் அங்கு உயிர்ப்போடு வளர்த்தெடுக்கலாயினர். இலங்கைத் தமிழர் பண்பாட்டின் உண்மையான வேர்களைப் புலம்பெயர்ந்துவந்த சேரநாட்டினர் பெருமளவு படிப்படியாக அழித்துவிட்டபோதிலும் ஈழத்துத் தென்கிழக்குப் பகுதி வாழ் மக்கள் அவற்றை இன்றுவரை வளர்த்தெடுத்ததன்வழி ஈழத்தமிழர் மரபுகளுக்கு அவர்களே பெருமை சேர்த்தவர்களாகின்றனர்”(7).

சேரநாட்டு குடியேற்றம் தொடர்பாக இலங்கை வரலாற்றில் அறியப்படும் செய்திகளும் முதன்மை பெறுகின்றனர். சேரநாட்டைச் சேர்ந்த சேனன், கூத்திகன் ஆகிய இரு படைத்தளபதிகள் படையெடுத்து வந்து, இலங்கை மன்னன் சூரத்தீசனுடன் போரிட்டு, அனுராதபுரி அரசைக் கைப்பற்றி, கி.பி. 236-214 காலப் பகுதியில் தாம் ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் கூத்திகன் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள சம்மாந்துறையை இருப்பிடமாகக்கொண்டு மட்டக்களப்புப் பிரதேசத்தை ஆட்சி செய்துள்ளான். இம்மன்னனின் ஆட்சியில் கிடைத்த சேரநாட்டு தொடர்பும் கண்ணகி வழிபாட்டுக்குத் துணையாக இருந்திருக்கும் என்பதை இவ்வரலாற்றுச் செய்தி உணர்த்துகிறது.

மேலும், சேரநாட்டினரின் வாழ்வும் வழிபாட்டு முறைகளும் ஈழத்திலும் ஒத்துக் காணப்படுகின்றன. கேரளத்து மேற்கு காற்றாடிமலை உச்சியின் காட்டுப் பரப்பில் அமைந்துள்ள 'குன்னனூர்' என்ற இடத்தில் அமைந்துள்ள கண்ணகி கோயில் பற்றியும், அங்கு நடைபெறும் கண்ணகி வழிபாட்டில் பெண்கள் மட்டுமே பங்குபெறுதல் குறித்து அறியும் வாய்ப்பும் இக்கட்டுரையாளருக்குக் கிடைத்தது. அங்குப் பெண்கள் மட்டுமே நடத்தும் கண்ணகி வழிபாட்டு சடங்குச் செய்தி ஈழத்துக் காரைதீவுக் கண்ணகி கோயில் நடைமுறைகள் சிலவற்றோடு ஒத்து காணப்படுதல் நோக்கத்தக்கது. காரைதீவுக் கண்ணகி கோயிலுக்குரிய சொத்து பேணல், சொத்துரிமை, வாரிசு என்பன பெண்வழியாகச் சேருதல் கருத்தில் கொள்ளத்தக்கது. சேர நாட்டிற்கும் கிழக்கிலங்கை ஊர்ப் பகுதிகளுக்கும் பல்வேறு வழிகளிலே தொடர்பும் ஒற்றுமையும் காணப்படுதல் பற்றி ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. சான்றாகச் சேரநாட்டு இடப்பெயர்களான மலையாளன்சீமா, மலையன்சீமா, பணிக்கன்சாட்டி, மலையாளன்காடு, மலையாளன்வளவு, சேரன்கலட்டி, வில்லவன்தோட்டம், கோவளம், பாலைக்காடு, குதிரைமலை, குறும்பாவத்தை எனப் பல இடப்பெயர்கள் வழக்கிலுள்ளன. இலங்கையில் வழங்கும் மக்கட் சாதிப்பெயர்கள், உணவுப் பெயர்கள், அணிகலன்களின் பெயர்கள், ஆண்கள் கன்னக் குடுமி வைத்தல் எனப் பல சான்றுகள் சேரநாட்டுக்கும் ஈழத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன. மேலும் சேர நாட்டில் கண்ணகி வழிபாட்டில் பெண்கள் குரவை இசைப்பது போன்றே கிழக்கிலங்கைக் காரைதீவுக் கண்ணகி அம்மன் வழிபாட்டிலும் பெண்கள் குரவையிட்டுப் பக்தியுடன் வழிபடுதல் ஒப்பிடத்தக்கது.

இலங்கையில் 'ஊர் சுற்றுக் காவியம்', 'உடுகுச்சிந்து' ஆகிய நாட்டுப்புற இலக்கியங்களும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையனவாகும். காரைதீவுக்

கண்ணகி அம்மன் சடங்கில் படிக்கப்படும் 'கண்ணகி வழக்குரை' நாட்டுப்புற இலக்கிய மரபில் தோன்றிய ஒரு பேரிலக்கியமாகும். அதுபோன்றே யாழ்ப்பாணம் மந்திகையில் அமைந்துள்ள கண்ணகி கோயிலில் “கோவலனார் கதை” என்ற நாட்டுப்புற இலக்கியம் கோயில் சடங்குகளுடன் தொடர்பு உடையதாக வழக்கிலுள்ளது. வடஇலங்கையில் கந்தரோடைப்பகுதியில் அங்கணாமைக்கடவை என்ற இடத்தில் அமைந்த கண்ணகி கோயில், பின்னாளில் மனோன்மணித் தெய்வமாக, வேதாகம முறையிலான வழிபாட்டு கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த கண்ணகி கோயில்கள் ஆறுமுகநாவலரின் சமயசீர்திருத்தங்களால் மனோன்மணி, இராஜேஸ்வரி அம்மன் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. ஆயினும், அத்தகைய மாற்றங்கள் கிழக்கிலங்கையில் ஏற்படாமைக்கு இப்பிரதேச மக்களின் தாய்வழி மரபும், அப்பகுதி மக்கள் கண்ணகித் தெய்வத்தின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியும், அவ்வழிபாட்டில் கொண்டிருந்த தளராத ஈடுபாடும் காரணங்களாகும். கடந்த 20 ஆண்டுக் காலங்களில் இக்கோயில் வழிபாட்டு முறையிலும் பிராமணிய ஆகமப் பூசைமுறைகள் புகுத்தப்பட்டு வருதல் நோக்கத்தக்கது.

மிகப் பழமை வாய்ந்த காரைதீவுக் கண்ணகியம்மன் கோயில் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பழமரபுக் கதைகள் கைகொடுத்து உதவுகின்றன. ஜி.கே.சாம்பசிவம், 'ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் - காரைதீவு' (2003) என்ற நூலிலே, நாட்டுப்புற வழக்கியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு காரைதீவுக் கண்ணகை அம்மன் கோயில் வரலாற்றை எழுதியுள்ளார். இந்நூலில் கூறப்படும் பழமரபுக் கதைகள் காலம் காலமாக, காரைதீவு மக்களால் நம்பிக்கையுடன் பேணப்பட்டு வருகின்றன. சேரநாட்டிலிருந்து வந்தவர்களே இவ்வழிபாட்டைக் காரைதீவுக்குக் கொண்டு வந்தனர் என்பதே இக்கதையின் மையப் புள்ளியாக அமைகின்றது:

இக்கதையில் சேரமன்னனன் சேனாதிராசனின் மகள் தேவந்தி(விதவை), தனது மகள் சின்னநாச்சியாருடன் கதிர்காம யாத்திரை நோக்கிக் கால்நடையாக வந்து, காரைதீவில் ஓய்வு எடுப்பதற்குத் தங்கியிருந்தார்; இவ்வூர் மக்கள் அவர்களுக்கு ஓர் குடிசை அமைத்துக்கொடுத்தனர்; அவர்கள் தம் வழிப் பயணத்திற்குக் காவலாகக்கொண்டு வந்த கண்ணகி சிலையையும் சிலம்பையும் அங்கு நன்கு நிழல் தந்துகொண்டிருந்த வேப்பமரத்தடியில் வைத்து வழிபட்டனர் எனக் கூறப்படுகிறது. இச்செய்தி ஈழத்தின் பூர்வீகக் குடியேற்ற வரலாற்றுடனும் ஒத்து செல்வது நோக்கத்தக்கது.

அடுத்ததாக, கிழக்கிலங்கையில் பட்டிப்பளைப் பகுதியில் ஆடகசவுந்தரியின் ஆட்சி நிலவியமையை வரலாற்று ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.(8) கண்ணகி அம்மன் கோயில் பட்டிப்பளைப் பகுதியில் அமைந்திருந்த சிங்கபுரத்தோப்பு (சிங்காரத்தோப்பு) என்ற மாளிகையில் அரசு வீற்றிருந்து ஆட்சிசெய்த எதிர் மன்னசிங்கனுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட வரலாற்று தடயங்களும் கண்ணகி கோயிலின் தொன்மை வரலாற்று காலத்தை அறிவதற்குத் துணையாகின்றன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதலாகக் காரைதீவில் கண்ணகி கோயில் அமைந்திருந்தமையை இப்பகுதி நாட்டுப்புற வழக்கிலுள்ள கதைகள் சான்றுபடுத்துகின்றன. காரைதீவுக் கண்ணகி கோயிலுக்குரிய "கண்கண்வெளி" 101 ஏக்கர் வயற்காணி பற்றிய மரபுவழிக் கதைகள் எதிர்மன்னசிங்கனின் மனைவியுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இம்மன்னன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகக் கண்ணகி கோயில் அமைத்து, அக்கோயிலுக்கு மானியமாக நிலபுலங்களும் வயற்காணிகளும், பட்டிமாடுகளும், பொற்காசுகளும் மானியமாக வழங்கிய செய்திகளும் மக்களிடையே வழங்கி வருகின்றன. அதுபோன்றே, எதிர்மன்னசிங்கன் பற்றிய கதைகளும் அவ்வகையில் வரலாற்று முதன்மை பெறுகின்றன. இவற்றின் அடிப்படையில், காரைதீவுக் கண்ணகி கோயில் வரலாறு பற்றி ஜி.கே சாம்பசிவம் கூறுவது நோக்கத்தக்கது:

"எதிர்மன்னசிங்கன் ஆலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அருகாமையில் கல்லும்வெட்டிச் சுட்டு, அவற்றையும் அதற்கு வேண்டிய பொருட்களையும் ஏற்றி ஆட்களுடன் வந்து அம்மாள் இருந்த வேப்ப மரத்தடியில் சொற்பக் காலத்துக்குள் அழகான ஒரு மடாலயத்தையும் கட்டி முடிக்கலாயினர். பின் ஒரு சுபமுகூர்த்தம் பார்த்துத் தம்மைச் சேர்ந்தவர்களோடு வந்து ஊரவர்களையும் அழைத்து, அம்மாளை ஆலயத்தில் ஸ்தாபம்பண்ணி அதற்குரிய காணிகளுக்கு எல்லை வகுப்பதற்குச் சந்நிதானத்தின் தெய்வம் பிடித்து ஆடும் ஒருவரை அணுகிக் கற்களைக் கொடுக்க, அவர் ஓடி ஓடி நான்கு மூலைகளுக்கும் நான்கு கற்களைப் போட்டு வைத்தார். அதன் பின் அளந்து பார்த்தபோது 101 ஏக்கர் விஸ்தீரணமாகக் காணப்பட்டது. அதனையே எல்லையாகக் கொண்டு காணிகளையும் கோயிலையும் செப்பேடு திருமுகத்தில் எழுதித் தெய்வநாச்சி அம்மையாரிடம் ஒப்படைத்து, எக்காலமும் காணியின் ஊதிபத்தைக்கொண்டு தவறாது பூசை நடக்கவும், எல்லோரும் வந்து வணங்கி வழிபாடாற்றவும் ஏற்பாடு செய்து போயினர்"(9).

இவ்வாறாகத் தோற்றம் பெற்ற காரைதீவுக் கண்ணகியம்மன் கோயில் மூன்று குடிகளால் (Sub-clans) பேணிக்காக்கப்பட்டு வருகின்றது. சேரநாட்டிலிருந்து வருகை தந்த சின்னநாச்சி வழிவந்த மாணிக்கநாச்சி, கதிரநாச்சி, வன்னிநாச்சி என்ற பெண்களின் மரபினரே இன்றுவரை இக்கோயிலைப் பேணி காத்துப், பூசைசெய்து வருகிறார்கள். மூன்று பெண்களை அடிப்படையாகக் கொண்ட கோயில் உரிமைக்காரரை "வகுத்துவார்" எனக் குடிவழி (SUB-CLAN) வந்தோரைக் கோயில் அறங்காவல் குழுவாக அமர்த்தி, அக்குழுவினரே கோயில் நடத்துகை, கோயில் சடங்குகள், திருவிழாக்கள் முதலியவற்றிலும் பொறுப்பாளராகச் செயற்படும் மரபைக் கைக்கொள்ளும் வழக்கம், காரைதீவுக் கண்ணகி கோயிலின் மன்பேராயக் கட்டுமானத்தின் இயல்பா உள்ளது. மூன்று குடிகளுக்கும் தலைவர்களாக மூன்று வண்ணக்கர்களும், இம்மூன்று குடியினர் சார்பாகக் கண்ணகி அம்மனுக்குப் பூசை செய்வதற்காக மூன்று கப்புகன்மாரும் இக்கோயில் உரிமையாளர்களின் ஒப்புதலுடன் அமர்த்தப்படுகின்றனர். இக்கட்டுரை ஆசிரியர், "மாணிக்கநாச்சியார் குடிவழிப் பிறந்து, கண்ணகி அம்மனைக் குலதெய்வமாக கொண்டவர்". சுவாமி விபுலாநந்தரும் கண்ணகி அம்மனின் அருள் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆண்டு தோறும் வைகாசி மாதம் நிறைமதிக்கு முன்பாக வளர்மதி நாட்களில் அம்மன் கோயில் திருக்கதவு திறக்கப்பட்டு எட்டு நாட்களும் சிறப்புப் பூசை, வழிபாடுகள் நடத்தப்பட்டு, இறுதியில் பொங்கலிடுதல், குளிர்ச்சி பாடுதல் முதலியன இடம்பெறுதல் இக்கோயில் நடைமுறைகளாகும். எட்டு நாட்களும் பகலும் இரவும் 'கண்ணகி வழக்குரை' (ஏட்டிலக்கியம்) கோயில் சடங்கு நேரங்களில் இருவர் சேர்ந்துவிடுவது வழக்கமாகும். முதலாம் நாள் சடங்கு "கதவு திறத்தல்" என்ற பூசை வழிபாட்டுடன் தொடங்கி, அதன் ஐந்தாம் நாளில் "கலியாணக்கால் வெட்டுதல்" சடங்கு நடைபெறும். அலங்காரப் பந்தல் அமைத்து, திருமணக்கால் வெட்டிவந்து, அதனைக் கண்ணகி அம்மனாக ஒப்பனை செய்து, பூசை வழிபாடு நிகழும். அதனைத் தொடர்ந்து, கண்ணகி - கோவலனார் திருமண நிகழ்வும், 'கண்ணகி வழக்குரையின் கலியாணக்காதை' படிப்பும் இடம்பெறும். இறுதி எட்டாம் நாளில் "குளுத்தி" எனப்படும் சிறப்புப் பூசை இடம்பெறும். கண்ணகி அம்மன் சடங்கின் நிறைவு நிகழ்ச்சியாகப் பொங்கல் இடுவர். வைகறைப்பொழுது முதலாக 'குளுத்தி ஏட்டுப்படிப்பு' இடம்பெறும். ஊர் மக்கள் கோயிலைச் சூழவுள்ள வெளியில் நேர்த்தி அடிப்படையில் பொங்கல் செய்து படைத்துத், தத்தம் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்வர்.

கண்ணகி மதுரையை எரித்த பின்னர் இடையர்சேரி வந்தடைந்ததும், இடையர் குலப்பெண்கள் கண்ணகிக்குக் குளுத்திச் சடங்குகள் நடத்தியமை பற்றிய பாடல்களும் கண்ணகி வழக்குரையில், நன்கு பாடப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் காவியமாகிய கண்ணகி வழக்குரையில் 2220 சந்த விருத்தப் பாடல்கள் உள்ளன. அவை கண்ணகித்தேவியார் சிவனருளால் மாங்கனியிலிருந்து தோற்றம் பெற்றவள் எனக் கூறுகின்றன. அதன் அடிப்படையில் சிங்கள மக்களும் கண்ணகியை 'அம்ப பத்தினி" (அம்ப = மாங்கனி) எனப் போற்றுகின்றனர். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கண்ணகி கோயில்களில் சடங்கு காலங்களில் 'உடுகுச் சிந்து', 'ஊர்சுற்று காவியம்' என்னும் நாட்டுப்புற இலக்கியங்களும் படிக்கப்படும். அத்துடன் கண்ணகி அம்மன் சடங்கு காலங்களில் இடம் பெறும் கொம்பு முறித்தல் என்ற சமய விளையாட்டில் பாடப்படும் வடசேரி - தென்சேரிப் பாடல்கள், அம்மன் வசந்தன் பாடல்கள் என்பனவும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய நாட்டுப்புற இலக்கியங்களேயாகும்.

கண்ணகி வழிபாட்டு காலங்களில் கோயிலில் இடம்பெறும் கொம்பு முறித்தல், போர்த் தேங்காய் உடைத்தல், தேர்க்கல்யாணம், தேர் இழுப்பு முதலிய வழிபாட்டுடன் தொடர்புடைய விளையாட்டுகளும் இடம்பெறுதல் வழக்கம். அந்நாட்களில் காரைதீவு மக்கள் அனைவரும் மிகப் பயபக்தியுடனும் விரத நடைமுறைகளுடனும் அம்மன் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பர். இவ்வழிபாட்டு நிகழ்வுகளில் கப்புகனார் உடுக்கடித்துப் பாட, பெண்கள் குரவையிட்டு அம்மனை வழிபடுவது சேரநாட்டு வழிபாட்டு தொடர்வை நினைவூட்டுவதாகும்.

பண்டைக் காலம் முதலாக வேம்பு, ஆல், அரசு, இத்தி முதலான மரங்களின் அடியில் தெய்வ வழிபாடு இடம்பெற்று வந்திருக்கிறது. அவ்வகையில் காரைதீவுக் கண்ணகித் தாயின் வழிபாடும்; வேப்பமரத்தடியிலே தோன்றியதாகும். இவ்வேப்பமரத்தின் ஆண்டுக் கணிப்பை 'DNA' அடிப்படையில் ஆராய்ந்தால் இக்கோயிலின் காலத்தை உறுதிப்படுத்தலாம். அனுராதபுரத்து வெள்ளரசு மரம் இலங்கையில் புத்தமத வரலாற்றை அறியத்தருவது போன்று, இக்கோயில் வேப்பமரமும் காரைதீவுக் கண்ணகி அம்மன் கோயில் வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றாகின்றது.

இக்கண்ணகி கோயில் பண்டைய அரச இறையிலி நிலபுலங்களைக் கொண்டிருத்தல் அதன் மேன்மைக்குச் சான்றாகும். பழமை மிக்க 101 ஏக்கர் இறையிலி வளமான வயற்காணிகளையும், கோயிலுக்கு உரிமையாகவுள்ள நிலபுலங்களையும் கோயில் உரிமையாளர் (கோயிற்காரர் - கோயிலார்) மிகச் சீரிய

முறையில் பேணிக்காத்து, கோயில் செயற்பாடுகளைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். பல நூற்றாண்டுகளாகக் கோயில் உடைமைகள் அழிந்து போகாமல் - பிறர் கைகளுக்குச் சேராமல் கோயில் அறங்காவல் குழுவினர் விழிப்புடன் பேணிவருகின்றனர். ஏற்கனவே வழிபாட்டிலிருந்த கண்ணகி அம்மன் கோயில் கட்டிடம், கோபுரம் முதலியவை சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இக்கோயிலில் 2014இல் "மீள் குடமுழுக்கு" நிகழ்ந்துள்ளது. கோயில் என்பது மக்களை நெறிப்படுத்தும் ஓர் அற நிலையமாகும். மக்களின் பன்முகத் தேவைகள், மக்களின் இன்பத் துன்பங்கள், கல்வி, நூலகசேவை, கலை வளர்த்தல், பண்பாடு பேணல் முதலான பல்வேறுபட்ட மன்பேராயப் பணிகளைக் கோயில்கள் முன்னின்று செயற்படுத்தல் வேண்டும். அவ்வகையில் காரைதீவுக் கண்ணகி அம்மன் கோயில் அறங்காவல் குழுவினர் மக்கள் பணியில் ஈடுபட்டு வருவதோடு, ஊர் முன்னேற்றத்திலும், ஊர் எல்லையைப் பேணிக் காப்பதிலும் மிக்க விழிப்புடன் செயற்பட்டு வருதலும் குறிப்பிடத்தக்கது. இவ்வூர் எல்லைகள் அயல் ஊரவர்களால் சுரண்டப்படும் போதெல்லாம் கண்ணகித் தாயார் தன் கோயில் அறங்காவல் குழுவினரை அனுப்பிக் காவல் செய்து வருகிறார் என மக்கள் நம்புவதும் இக்கோயிலின் சிறப்பாகும்.

**சான்றெண் குறிப்புகள்**


1. இராமநாதன், ஆறு., தமிழர் வழிபாட்டு மரபுகள் - நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு ஆய்வு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2018, பக். 27.

2. மேலது: 2018, பக். 15.

3. இளையதம்பி, பாலசுந்தரம்., தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம், மணிமேகலை பிரசுரம், சென்னை, 2019, பக், 160 - 196.

4. (I) S.O. Kanagaratnam., Monograph of the Batticaloa District., (II) வி. சீ. கந்தையா., மட்டக்களப்புத் தமிழகம். ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், இலங்கை, 1964., (III) ஞா.தனபாக்கியம்., மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி., (IV) கவிக்கோ வெல்லவூர்க்கோபால்., மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம், மனுவேதா வெளியீடு, மட்டக்களப்பு, 3ஆம் பதிப்பு, 2011., (V) பேராசிரியர் சி. பத்மநாதன்., இலங்கைத் தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (கி.மு.250 - கிபி.300) முதலிய வரலாற்று நூல்கள் நோக்கத்தக்கவையாகும்.

5. இளையதம்பி, பாலசுந்தரம்., தமிழர் திருமண மரபுகள் மட்டக்களப்பு மாவட்டம், விவேகா அச்சகம், கனடா. 2002.

6. பத்மநாதன், பேராசிரியர் சி., இலங்கைத் தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (கி.மு.250 - கிபி.300), இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துமத அலுவல்கள் அமைச்சு, கொழும்பு, 2016.

7. கந்தையா, வி. சீ., பதிப்பாசிரியர், கண்ணகி வழக்குரை(மீள்பதிப்பு), கண்ணகி கலை இலக்கியக் கூடல் வெளியீடு, மட்டக்களப்பு, மீள்பதிப்பு, 2017.

8. வெல்லவூர்க்கோபால், கவிக்கோ., - மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம். வி. சீ. கந்தையா, மட்டக்களப்புத் தமிழகம் என்ற நூல்கள் நோக்கத்தக்கன.

9. சாம்பசிவம், ஜி.கே., ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வரலாறு, கலைக்கோட்டம் வெளியீடு, காரைதீவு. 2003, பக் - 17.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712